முருகப்பெருமான் துணை

**மகான் சடைய நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.10.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஆறுமுகனார் சக்தியாக வந்த
   அவதார ஞான வள்ளலே
   மாறுதலை உலகுக்குத் தர
   மாதவசியாக வந்த குருவே
2. குருவே உந்தன் பெருமை கூறி
   கூறிடுவேன் சோபகிருது தரிவைதிங்கள்
   இருபானெண் திகதி கதிர்வாரம்
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 28 ம் நாள், 15.10.2023, ஞாயிற்றுக்கிழமை)
   இயம்பிடுவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை சடைய நாயனாரும்
   அருளுவேன் உலகநலம் பெற
   வாசிவென்ற ஞானிகள் படை
   வரம்தந்து காக்க வேண்டி
4. வேண்டியே பிரணவக்குடிலில்
   வேலவன் சக்தியாக இருக்க
   தொண்டென இணைந்து மக்கள்
   தேசிகன் திருவடி பணிந்துமே
5. பணிந்துமே நித்ய பூசைகள்
   பாமரரும் செய்ய வேண்டும்
   துணிந்து தருமம் செய்துமே
   தேசிகன் அவதாரம் அறியவே
6. அறியவே உலகெலாம் பறைசாற்ற
   அரங்கன் பலம் அளவிலா
   வரமாகப் பரவி உலகினில்
   வள்ளல் தன்மையாக மாறும்

7. மாறுதலை செய்யும் தவசி
மண்ணுலகில் மாற்றம் தனை
ஆறுமுகனார் செய்து முடிக்க
அவதாரம் கொண்ட நோக்கம்
8. நோக்கம் நிறைவேறி இனிதே
நிலவுலகம் ஞான லோகமாகும்
ஊக்கம்பட தொண்டர்களெல்லாம்
உண்மை நெறி அரங்கன் நெறி
9. நெறிஅகலா கட்டுப்பட்டு
நீதிமான்களாக வாழ்க்கை
அறிவுத் தெளிவுபட நடக்க
அனைத்தும் மாற்றம் காணும்
10. காண ஞான ஆட்சிதான்
கலியினில் பிரகடனமும்
ஞான தேசிகன் சேவையால்
நம்பகமுற நடந்தேறக் கூடும்
11. கூடாத வினை விலகும்
கூடாத கெடுதி அகன்று
ஈடேறும் தெய்வ ஞான ஆட்சி
இயம்பிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–